ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2344/22 - 2023 අගෝස්තු මස 09 වැනි බදාදා - 2023.08.09

2344/22 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 09 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுச் சட்டம்**

*1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுச் சட்டத்தின் 32 மற்றும் 33 ஆம் பிரிவுகளின் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள்*

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரொஷான் ரணசிங்க ஆகிய நான், 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுச் சட்டத்தின் 32 மற்றும் 33 ஆம் பிரிவுகளின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் இலங்கை மோட்டார் விளையாட்டுச் சங்கமான தேசிய சங்கத்தின் பதிவை இடைநிறுத்துகின்றேன். மோட்டார் விளையாட்டுக்காக, உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் மற்றும் தற்காலிக ஏற்பாடாக, சங்கத்தின் செயற்பாடுகளைத் தொடர பின்வரும் குழுவை நியமிக்கிறேன்.

1. திரு. மகேஷ் கம்மன்பில - தலைவர்
2. மேஜர் ஜெனரல் இந்துனில் ரணசிங்க - செயலாளர்
3. திரு. புபுது விக்ரம - பொருளாளர்
4. ஜனாப் ரமீஸ் மஹ்ரூர் - உறுப்பினர்
5. திரு. நிஷான் வீரசூரிய - உறுப்பினர்
6. திருமதி சம்பிகா அமரசேகர - உறுப்பினர்
7. திருமதி சஜ்ஜாத் சுஹைர் மாயா - உறுப்பினர்

மேலும், 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டம் மற்றும் செல்லுபடியாகும் விளையாட்டு ஒழுங்குவிதிகளின்படி, இலங்கை மோட்டார் விளையாட்டுச் சம்மேளனத்தின் விசேட பொதுக் கூட்டத்தைக் கூட்டி, தேர்தற் குழுவொன்றை நியமிப்பதற்கு விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு நான் அங்கீகாரம் வழங்குகின்றேன். மேலும், பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஷமெல் பெர்னாண்டோவின் மேற்பார்வையின் கீழ் தேர்தற் குழு ஒன்றுகூடி தேர்தற் செயற்பாட்டை நடத்தவுள்ளது.

**ரொஷான் ரணசிங்க** (பா.உ.),
விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்.

கொழும்பு,
*2023, ஓகத்து 09.*

EOG *08-0093*